**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 13** **நாள்:26.01.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய குடியரசு தினவிழாவில் மூவர்ண தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செய்து, 2 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.2,10,000 மதிப்பிலான காசோலையினையும், 92 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களையும் சிறப்பு அதிகாரி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்திய குடியரசு தினவிழா இன்று (26.01.2018) சிறப்பாக நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், தேசிய மாணவர் படை, கலர் பார்ட்டி, சாரண, சாரணியர் மற்றும் வாத்தியக்குழுக்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 5 பள்ளிகளை சேர்ந்த மாணவ, மாணவிகளின் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மகளிர் சுயதொழில் தொடங்கிட சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்கள் பெங்குயின் மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு ரூ.1,10,000/–க்கான காசோலை, சிவசக்தி மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.1,00,000/– இலட்சத்திற்கான காசோலை என மொத்தம் ரூ.2 இலட்சத்து 10 ஆயிரத்துக்கான நேரடி வங்கிக்கடன் காசோலைகளை வழங்கினார். 2015–16ஆம் ஆண்டில் மருத்துவத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 6 மருத்துவ அலுவலர்களுக்கு செயல்திறன் விருதிற்கான சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

அதன் பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக 92 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ/மணவியர்களுக்கும், அணிவகுப்பில் கலந்து கொண்ட தேசிய மாணவர் படை, சாரண, சாரணியர், கலர் பார்ட்டி மற்றும் வாத்தியக்குழுக்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை ஆணையாளர்கள், வட்டார துணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர் (பொ.நி.ம.ப.), மண்டல அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**